
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1014

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

36

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# ‘அவன் பித்தனா?’
# தத்துவம் கற்றுத் தந்த அழகிரி!

அவன் பித்தனா? இல்லை! மனநோய் கொண்ட சமூகத்துக்கு மருத்துவம் பார்க்க வந்த சமூக வைத்தியன்! ஆம், கலைஞரின் ‘அவன் பித்தனா’ திரைப்படம் தொடக்கக் காட்சி முதல் இறுதிக்காட்சி வரை சமத்துவம் பேசிய சமூக அரசியல் திரைப்படமாக அன்றைக்குப் பரபரப்பைக் கூட்டிய படம்.

வழக்கம்போலவே கலைஞர் இத்திரைப் படத்திலும் ஒரே ஒரு கேட்டினைப் பற்றி மட்டும் பேசாமல், ஜாதி எனும் சமூக நோயையும், உழைப்புச் சுரண்டலால் விளையும் வறுமை எனும் அரசியல் நோயையும் ஒரே நேரத்தில் எதிர்த்துத் திரைக்கதை வசனத்தை எழுதியுள்ளதுடன், அவற்றுக்கான தீர்வையும் மிகத்தெளிவாக முன்வைத்துள்ளதைக் காண்கிறோம்.

ஜாதி ஏற்றத்தாழ்வு பார்த்துத் தனது மகனின் காதல், கலப்புத் திருமணத்தை மறுக்கும் அதே நல்லையா, பிறகு மனம் திருந்தி ஜாதி முக்கியமல்ல மனிதர்தான் முக்கியம் என்று பேசுகிறார். அதேபோல போனஸ் கேட்டுப் போராடும் மில் தொழிலாளி களிடம் குமார் ‘இனி ஆலை அனைவருக்கும் சொந்தம்! நாம் அனைவருமே பங்குதாரர்கள், எனவே, லாபத்தில் அனைவருக்கும் பங்கு’ என்று கூறும் காட்சியும் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

ஆக, கலைஞரின் ‘அவன் பித்தனா’ திரைப்படம் ஜாதியும், ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வும் ஒழிந்த சமத்துவ சமுதாயத்தைப் பிரச்சாரம் செய்யும் ஓர் உன்னதக் காவியமாகும். படம் முழுவதும் கலைஞரின் திராவிட இயக்க அரசியல் ஓங்கி ஒலிக்கிறது.

படத்தின் திறப்புக் காட்சியே கலைஞரின் காந்தக் குரலோடுதான் தொடங்குகிறது. இதோ, கலைஞர் பேசுகிறார்...

**கலைஞர்:** விரிந்து பரந்த கடல் போல வீடு, வெள்ளம் போல் பணக்கூட்டம், வைர வைடூரியங்களின் ஒளியாட்டம். இவ்வளவு இருந்தும் மில் முதலாளி நல்லையாவுக்கு வாழ்க்கையில் நிம்மதி இல்லை. ஏன்? தன் விருப்பத்திற்கு மாறாகக் காதல் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தன் ஒரே மகன் ராஜாவை வீட்டை விட்டே துரத்திவிட்டார். தான் செய்த தவற்றைத் தாமதமாக உணர்ந்து வருந்துகிறார். அவனொரு குழந்தைக்கும் தந்தையாகி விட்டானாம். மகனுக்கு உடல் நலமில்லை, மரணப் படுக்கையில் கிடப்பதாகச் செய்தி வந்து நல்லையா மனம் மாறிப்போனார். மகனையும் மருமகளையும், பேரனையும் தம் மாளிகைக்கே அழைத்து வரப் புறப்பட்டுவிட்டார்.

காரில் நல்லையா பயணம் செய்து ராஜா குடியிருந்த வீட்டின் வாசலில் நின்று வீட்டாரை அழைக்கிறார்...

**நல்லையா:** அம்மா... அம்மா....

வீட்டுக்குள் இருந்து ஒரு பெண்மணி வருகிறார்

**பெண்:** யாரு என்ன வேணும்?

**நல்லையா:** ஏம்மா, ராஜா இருக்கும் வீடு இதுதானே?

**பெண் :** ம்... ம்... ராஜாவா? ராஜா இருந்த வீடு இதுதாங்க.

**நல்லையா:** இப்ப அவன் எங்கம்மா? அவனுக்கு ரொம்ப உடம்புக்குச் சரியில்லைன்னு கேள்விப்பட்டு வந்தேன்.

**பெண் :** வாலிபமான வயசாச்சேன்னு எமன் பார்க்குறானா?

நல்லையா அதிர்ச்சியடைகிறார்.

**நல்லையா:** அம்மா...

**பெண்:** நீங்க யாருங்க? ராஜாவோட அப்பா இருக்கிறாரே, மில் முதலாளி நல்லையா, அவரைத் தெரியுமா உங்களுக்கு? ஏன் அந்தாளுக்கு புத்தி அப்படிப் போச்சு? ஒரே புள்ளே, அவனுக்கு மனசுக்குப் புடிச்ச பொண்ணை கட்டிக்கிட்டா, இதில என்ன ஜாதி, ஆச்சாரம், கவுரவம் எல்லாம் பறந்தா போயிடுச்சு? அவ்வளவு பெரிய பணக்கார வீட்டுப்புள்ளே இப்படி அநாதையா செத்தானே இதுல கவுரவம் கெடலையா?

நல்லையா கண்ணீர் சிந்துகிறார்....

**நல்லையா:** இரும்பு இருதயம் அம்மா, அவனுக்கு இரும்பு இருதயம். ஏம்மா, இப்ப ராஜாவோட மனைவியும் அவன் குழந்தையும் எங்கம்மா இருக்காங்க?

**பெண் :** அதை ஏன் கேட்கிறீங்க, நான் எவ்வளவோ சொன்னேன். என் பேச்சைக் கேட்கல. பேரப்பிள்ளையக் கொண்டுபோய் அவங்க தாத்தா இருக்கிறாரே மில் முதலாளி அவருகிட்ட விட்டுட்டு நான் எங்கேயாவது போறேன்னு அழுத கண்ணும் சிந்திய மூக்குமா அந்தப் பெண் வீட்டை விட்டே கிளம்பிட்டா...

**கலைஞர்:** கரும்பனைய கண்ணாளன் காலன் வாய்ப்பட்டான். அழும் குழந்தையுடன் ஆறாத கண்ணீருடன் தாலி இழந்த தாய் தவிக்கின்றாள், நடக்கின்றாள், நல்லையா வீடு தேடி. ‘தாத்தா வீடு பாரடா என் தங்கமே’ என்று குழந்தைக்குக் காட்டினாள் தாய். தாளாத சோகமோ தாங்காத மகிழ்ச்சியோ தரையினில் வீழ்ந்தாள், புழுவென நெளிந்தாள், பூமியை மறந்தாள் புதல்வனைப் பிரிந்தாள். ஆங்கோர் நல்லவன் அழகிரி என்பான் அருகினில் வந்தான். ஆதரவின்றி அழுத குழந்தையை அணைத்து மகிழ்ந்தான்.

**நல்லையா:** ராஜா, இந்தப் பாவி செய்த கொடுமையாலே என்ன விட்டு, நீ தான் போய்ட்டே, என் மேலே கோபிச்சுக்காமே உன் மகனையாவது என்கிட்ட அனுப்பிச்சு வைடா ராஜா.





படங்கள் உதவி : ஞானம்



**கலைஞர்:** பேரனைக் காண தாத்தா துடிக்கிறார். பேரன் குமாரோ பெருமனம் கொண்ட அழகிரிக்கும் அவன் மனைவிக்கும் செல்லப் பிள்ளையாகிறான். அழகிரி டீ கடை, ஆலைத் தொழிலாளிகளை நம்பி இருக்கும் இந்த டீ கடைதான் அழகிரியின் வாழ்க்கை வருமானச் சாதனம். குபேரன் வீட்டுச் சொத்துக்கு, வாரிசாக வேண்டிய இந்தப் பேரப்பிள்ளை இயற்கையின் விபரீத விளையாட்டினால், இங்கு கல்லாப் பெட்டிக்குக் காவல் புரிகிறான்.

ஒரு தொழிலாளி சாப்பிட்டுவிட்டு, பணம் கொடுக்காமல் போகிறார். அப்போது குமார்...

**குமார்:** இந்தாய்யா நில்லுய்யா காசு எங்கேய்யா?

**தொழிலாளி:** அப்புறம் தாறேன்யா

**குமார்:** சித்தப்பா.... சித்தப்பா....

**அழகிரி:** என்னப்பா

**குமார்:** இந்த ஆளு காசு தராமல் கம்பி நீட்டுறாரு

**அழகிரி:** பாவம், பாட்டாளிங்க பசி எடுக்கும்போது சாப்பிடட்டும் பணம் இருக்கும்போது கொடுக்கட்டும். நீ போப்பா... எனத் தொழிலாளியைப் போகச் சொல்கிறார் அழகிரி.

**கலைஞர்:** அழகிரியின் இந்த அன்பு மொழியைத்தான் அரிச்சுவடிப் பாடமாகக் கற்றுக்கொண்டான் குழந்தை குமார்.

**கலைஞர் தனது குரல்வழியாகவே முன்கதையையும், குமார் கற்றுக்கொண்ட வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றியும் பார்வையாளருக்கு எடுத்துச் சொல்லி விடுகிறார்.**

இவ்வாறு திரைப்படத்தின் தொடக்கத்தி லேயே கலைஞர் தனது குரல்வழியாகவே முன்கதையையும், குமார் கற்றுக்கொண்ட வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றியும் பார்வை யாளருக்கு எடுத்துச் சொல்லி விடுகிறார். மேலும், குமாருக்கு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தருபவருக்கு ‘அழகிரி’ என்ற பெயரைச் சூட்டி, தான் திராவிட இயக்கத்திற்கு வருவதற்குக் காரணமாக விளங்கிய பெரியாரியத் தொண்டர் பட்டுக்கோட்டை அழகிரிக்கும் தனது நன்றியையும் இங்கு பதிவு செய்து விடுகிறார் கலைஞர்.

...காட்சி விரியும்

## உருவ கேலியை
## உடைத்து நொறுக்கிய நடிகை!

‘அதர்ஸ்’ திரைப்படம் குறித்து, நவம்பர் 6-ஆம் தேதி சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அப்போது இயக்குநரிடம் யூடியூபர் ஒருவர் கதாநாயகியின் எடை எவ்வளவு என்று வக்கிர எண்ணத்தோடு கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார். இதற்கு முன்பும் இத்திரைப்படம் குறித்து, நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், படத்தின் நாயகனிடமும் கதாநாயகியின் எடை எவ்வளவு என்ற அதே கேள்வியை எழுப்பியிருந்தார். மேலும் தன்னுடைய கேள்வியில் என்ன தவறு என்ற தொனியிலும் தொடர்ந்து அவர் பேசிக்கொண்டு இருந்தார்.

அந்த யூடியூபருக்கு பதிலளித்த கதாநாயகி கௌரி கிஷன், “இந்தக் கேள்விக்கும் இந்தப் படத்திற்கும் என்ன சம்பந்தம் உள்ளது? எனது கதாபாத்திரத்தைப் பற்றியோ, அதற்காக நான் என்ன செய்தேன் என்பதைப் பற்றியோ ஒரு கேள்வியும் கேட்கப்படவில்லை. எனது எடை என்னவென்று தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? இதே கேள்வியை ஒரு கதாநாயகனிடம் கேட்பீர்களா?” என்று காட்டமாக பதிலளித்துள்ளார்.

இந்தக் கேள்வி சாதாரணமாகக் கேட்கப்பட்டது என்ற தொனியில் மற்றொருவர் இதை நியாயப்படுத்த, “எனக்கு அதில் எந்த நகைச்சுவையும் தெரியவில்லை, உருவ கேலியை இயல்பான செயலாக மாற்றாதீர்கள்” என்றும் கண்டித்தார். வக்கிரமான கேள்வியை மிக இயல்பாக எழுப்பியதோடு, அதை நியாயப்படுத்தவும் செய்த அந்த யூடியூபருக்கு கண்டனங்களும் குவிந்துள்ளன.

“பெண் திரைக்கலைஞரின் உடல் எடையைக் கேலிக்குள்ளாக்கும் நோக்கத்துடன் கேள்வி கேட்பது அருவருக்கத்தக்கது, அநாகரீகமானது. இதுபோன்று அருவருக்கத்தக்க ஆணாதிக்க மொழியில் செயல்படுபவர்களை சக பத்திரிகையாளர்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும்” என்று சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டித்துள்ளது. திரைத்துறை பிரபலங்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் பலரும் அந்த யூடியூபரின் ஆணாதிக்க மனநிலையை கேள்வி எழுப்பியுள்ளதுடன், கௌரி கிஷனின் துணிச்சலைப் பாராட்டியுள்ளனர். உருவ கேலிகளைக் கண்டு அஞ்சி உடைந்து முடங்கும் காலம் அல்ல இது என்பதை, அதைச் செய்வோர் உணர வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைச் சந்தித்த தருணம்!



அம்மன் பாபு

2016-ஆம் ஆண்டில் தி.மு.கழக துணைத் தலைவராக தளபதி அவர்கள் இருந்தபோது அண்ணன் கே.என்.நேரு அவர்களுடன் சென்று சந்தித்தபோது எடுத்த படம். கழகப் பணியில், காட்டிய தீவிரமே 2022-இல் நடைபெற்ற துறையூர் நகராட்சித் தேர்தலில், 13-வது நகர் மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு மக்கள் பணியாற்றி வருகின்றேன். அண்ணன் நேரு அவர்களுடன் தலைவரைச் சந்தித்த தருணம் மறக்க முடியாத ஒன்று.

**– அம்மன் பாபு எம்.சி, மாவட்ட அமைப்பாளர், சுற்றுச்சூழல் அணி, திருச்சி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அண்ணாவுடன் கலைஞரும்!

1967-ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதி, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம், ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, தமிழ்நாடு சட்டமன்ற கழகத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றத் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், மார்ச் 2 ஆம் தேதி ஆட்சி அமைக்க உரிமை கோரி, ஆளுநரைச் சந்திக்கப் புறப்பட்ட அண்ணாவுடன் சென்றவர்கள், நாவலரும் கலைஞரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131